இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 84 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஐப்பசி 17 – செவ்வாய்க்கிழமை 03 நவம்பர் 2026 – மதுரை 8 பக்கங்கள் Established:10.8.1942 - Volume:85 - Issue 84: Thiruvalluvar Year - 2057 - Ippasi 17 - Tuesday 03 November 2026 - Madurai 8 Pages ₹ 5.00

ரூ.1,614 கோடி கொரிய முதலீடுகள் ஆந்திராவுக்கு சென்றுவிட்டன! ஜி.எஸ்.டி. வருவாயும் குறைந்துவிட்டது!

த.வெ.க. ஆட்சியில் தமிழ்நாட்டின் வளர்ச்சி புதைக்கப்பட்டுவிட்டது!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கடும் விமர்சனம்!

சென்னை, நவ. 3 -

"ரூ.1,614 கோடி கொரிய முதலீடுகள் ஆந்திராவுக்கு சென்றுவிட்டன. ஜி.எஸ்.டி. வருவாய் வளர்ச்சியும் குறைந்துவிட்டது. மொத்தத்தில் த.வெ.க. ஆட்சியில் தமிழ்நாட்டின் வளர்ச்சி புதைக்கப்பட்டுவிட்டது" என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடும் விமர்சனம் செய்துள்ளார்.

கடந்த அக்டோபர் மாதத்தில் தமிழ்நாட்டில் ரூ.11,661 கோடி வசூல் ஆகியுள்ளது. முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இதன் வளர்ச்சி விகிதம் தேசிய சராசரியை விட குறைவாக உள்ளது. நாடு முழுவதும்





கடந்த அக்டோபர் மாதத்துக்கான ஜி.எஸ்.டி. ரூ.2.3 லட்சம் கோடி வசூல் ஆகியுள்ளது. இது முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 23 சதவீத வளர்ச்சியாகும். இத்துடன் சேர்த்து தொடர்ந்து 4வது மாதமாக வசூல் ரூ.2 லட்சம் கோடிக்கும் மேல் உள்ளது. கடந்த செப்டம்பர் மாதத்தில் வசூல் வளர்ச்சி 14.7 சதவீதமாக இருந்தது.

தமிழ்நாட்டில் கடந்த மாதத்தில் ரூ.11,661 கோடி ஜி.எஸ்.டி. வசூல் ஆகியுள்ளது. இது முந்தைய ஆண்டு அக்டோபருடன் ஒப்பிடுகையில் 3 சதவீதம் மட்டுமே வளர்ச்சி அடைந்துள்ளது. இது தேசிய சராசரியான 16 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவு. தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாநிலங்களில் ஒன்றாக கருதப்படும் உத்தரப்பிரதேசத்திலேயே ஜி.எஸ்.டி. வசூல் 24 சதவீதம் அதிகரித்துள்ளது.

இதுபோல், பஞ்சாப் 25%, ஹரியானா 17%, டெல்லி 10%, மேற்கு வங்கம் 17%, அசாம் 47%, மற்றும் அண்டை மாநிலங்களான ஆந்திரா (24%), கேரளம் 23%), தெலங்கானா 14% ஜி.எஸ்.டி. வளர்ச்சியை பதிவு செய்துள்ளன. தி.மு.க. ஆட்சியில் தமிழகம் தொழில் வளர்ச்சியில் முன்னேறிய மாநிலமாக இருந்தது. ஜி.எஸ்.டி. வசூலில் முக்கிய பங்களிப்பை தமிழகம் கொண்டிருந்தது. ஆனால், த.வெ.க. ஆட்சி அமைந்ததில் கடந்த 3 மாதமாக ஜி.எஸ்.டி. வசூல் மைனஸ் 5% சதவீதம் வரை சென்றது குறிப்பிடத்தக்கது.



Nidhi @nidhi_sharma

BREAKING: Three Hyundai-Kia auto-part suppliers — Hwashin, Seoyon and Iwamet — have chosen to invest in AP over Tamil Nadu, committing Rs 1.6k cr and 1,418 jobs in Anantapur. The breakthrough follows Minister @naralokesh's July roundtable with Hyundai-Kia supply chain companies in Seoul. Swift follow-up by AP's @AP_EDB converted those discussions into MoUs within months. It is learnt that three firms had earlier held talks with the Tamil Nadu government but decided on AP. Reporting with @diarekhiET in @EconomicTimes
https://t.co/GgV5GC9w3n
#AndhraPradesh #andhra #AndhraPradeshNews

Three Hyundai, Kia Suppliers to Invest ₹1.6k cr in Andhra

South Korean auto component manufacturers choose AP over Tamil Nadu

Andhra-bound

Hwashin, Seoyon & Iwamet sign MoUs with AP govt to establish facilities in Anantapur

Development

The three cos had earlier been in discussions with previous DMK govt

Hwashin commits ₹600 cr

Seoyon to invest ₹514 cr

Iwamet to bring ₹250 cr

New Delhi / Chennai: In a significant win for Andhra Pradesh's efforts to attract global manufacturing investments, three South Korean automotive component manufacturers supplying Hyundai and Kia have chosen the state over Tamil Nadu for their expansion plans, committing a combined investment of ₹1,614 crore in Anantapur.

The development marks a setback for Tamil Nadu, which has been actively courting Korean companies to deepen its automobile manufacturing ecosystem and had held discussions with all three companies to set up or expand their operations in the state. Hwashin, Seoyon and Iwamet have signed memorandums of understanding (MoUs) with the Andhra Pradesh government to establish manufacturing facilities in Anantapur.

Hwashin has committed ₹600 crore and is expected to generate 800 jobs, while Seoyon will invest ₹514 crore and create 818 jobs. Iwamet has committed ₹250 crore, with an employment potential of 400.

Together, the three projects are expected to generate 1,418 jobs and strengthen Anantapur's position as an emerging automotive manufacturing hub.

The investments follow Andhra Pradesh IT Electronics and IBD Minister Nara Lokesh's visit to South Korea in July, during which he held a roundtable with automotive component manufacturers in the Hyundai and Kia supply chain.

The three companies participated in the interaction, following which the Andhra Pradesh government undertook sustained follow-up through Economic Development Board to convert the discussions into investment commitments.

"During our visit to South Korea, we met automotive component makers from the Hyundai and Kia supply chain and invited them to Andhra Pradesh. Our team followed up, and today Hwashin, Seoyon and Iwamet have committed significant investments in Anantapur. This shows the confidence global investors have in Andhra Pradesh, and we will support them every step of the way," Lokesh told ET. The developments come against the backdrop of Tamil Nadu's own efforts to retain and attract Korean investments. All three companies had earlier been in discussions with the previous DMK government over setting up or expanding their operations in the state, a person aware of the developments said. Queries sent to Guidance, Tamil Nadu's official investment promotion agency, remained unanswered as of press time Sunday.


"Iwamet had registered an entity in Tamil Nadu, and both Hwashin and Seoyon have existing operations in Irrigumbadur and Krishnagiri, so the dialogue involved getting them to double down on their investments in the state," the person said.

South Korea has emerged as an important investment partner for Tamil Nadu, particularly in automobiles, electric vehicles, electronics, renewable energy, heavy engineering and advanced manufacturing. In February barely a month before the state went to polls in April, the investment facilitation agency Guidance launched a dedicated Korea Desk to help Korean companies explore, invest and expand in Tamil Nadu.

The change of dispensation for the three suppliers, however, underlines Andhra Pradesh's ability to leverage direct political outreach and targeted engagement to compete with Tamil Nadu's established industrial ecosystem.

Tamil Nadu, now under the TVK government, is continuing its outreach to Korean investors. In June, Industries Minister S Keerthana visited South Korea and held discussions with Motherson, which subsequently signed an MoU in July for a ₹360 crore investment to manufacture advanced electric vehicle components for global markets.

The competing developments highlight the growing competition between state-born states to attract Korean manufacturing companies, particularly those linked to global automobile supply chains. While Tamil Nadu has an established base of Korean manufacturers, Andhra Pradesh is seeking to build its own automotive ecosystem by attracting suppliers.



ஜி.எஸ்.டி. வருமான வளர்ச்சியில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களைவிட பின்தங்கி உள்ளதைக் காட்டும் தரவு விளக்கப் படம்!

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது :-

காலையில் கடந்து வந்த இரு செய்திகள்:

1) GST வருவாய் வளர்ச்சியில் தேசிய சராசரிக்கும் கீழே த.வெ.க. ஆட்சியில் தமிழ்நாட்டின் வளர்ச்சி புதைக்கப்பட்டிருக்கிறது.

2) தமிழ்நாட்டுக்கு வரவேண்டிய 1,614 கோடி ரூபாய் கொரிய நாட்டின் முதலீடுகள் த.வெ.க. அரசின் அலட்சியத்தால் ஆந்திராவுக்குச் சென்றுவிட்டன. முதலீடுகளை ஈர்த்து தமிழ்நாட்டுக்குப் பெருமை சேர்த்த @Guidance_TN அமைப்பே இந்த ஆட்சியில் தனிநபர்களின் egoவுக்கு காவு கொடுக்கப்பட்டு விட்டது.

எல்லாத் துறைகளிலும் இவ்வளவு வேகமாக Reverse Gearஇல் செல்வது எப்படி என இவர்களிடம்தான் கற்றுக் கொள்ள வேண்டும்.

முதலமைச்சர் show காட்டக் கிளம்பிவிட்டார்!

இதுவெல்லாம் என்னவென்றே புரியாத, தெரியாத நம் முதல மைச்சரோ இடைத் தேர்தல் நடக்கும் தொகுதிகளில் கையசைத்து show காட்டக் கிளம்பிவிட்டார்.

Brace for tough times. Tamil Nadu is doomed under the TVK government.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

அண்டை மாநிலங்கள் இரட்டை இலக்கத்தில் வளர, தமிழ்நாட்டின் வளர்ச்சியோ 3 சதவிகிதமாக பின்தங்கி உள்ளது!

'ரீல்ஸ்' த.வெ.க. ஆட்சியில் தொடர் பொருளாதார சரிவு!

முன்னாள் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு கண்டனம்!

சென்னை, நவ. 3 -

"அண்டை மாநிலங்கள் இரட்டை இலக்கத்தில் வளர, தமிழ்நாட்டின் வளர்ச்சியோ 3 சதவிகிதமாக பின்தங்கி ரீல்ஸ் த.வெ.க. ஆட்சியில் தொடர் பொருளாதார சரிவை ஏற்படுத்தியுள்ளது என்று முன்னாள் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு கூறியுள்ளார்.

இதுகுறித்து முன்னாள் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

பொருளாதார வளர்ச்சியில் இந்தியாவின் முதன்மையான மாநிலங்களில் ஒன்றாக இருந்த தமிழ்நாடு த.வெ.க. ஆட்சியில் தொடர்ந்து சரிவைச் சந்தித்துக் கொண்டிருப்பது கவலை அளிக்கிற்து.

அக்டோபர் மாத ஜி.எஸ்.டி. வரி வருவாயில், கேரளா 23%, ஆந்திரா 24%, கர்நாடகா 18%, தெலுங்கானா 14% என அண்டை மாநிலங்கள் இரட்டை இலக்கத்தில் வளர, தமிழ்நாடு வெறும் 3% வளர்ச்சியோடு பின்தங்கியுள்ளது.

தமிழ்நாட்டில் இறக்குமதி



செய்யப்படும் சில முக்கிய பொருட்களில் இருந்து பெறப்படும் வரியால், மாநிலத்தின் மொத்த வரி வருவாயில் ஓரளவு உயர்வு காணப்பட்டாலும், நமது சொந்த உற்பத்தியின் மூலம் ஈட்டப்படும் வரி வருவாய் குறைந்தே வருகின்றது. இது மாநிலத்தில் நிலவும் ஒட்டு மொத்த பொருளாதார தேக்க நிலையின் அளவீடாகக் கருதப் படவேண்டியது என்பதனை த.வெ.க. அரசிற்குச் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

சொந்த உற்பத்தியை பெருக்கிட வேண்டும்!

எனவே, இறக்குமதி ஆகும் பொருட்களின் மீதான வரு வாயை மட்டும் நம்பியிராமல், நமது சொந்த உற்பத்தியினைப் பெருக்கி வெளிமாநிலங்களுக் கும் வெளிநாடுகளுக்கும் விற் பனையை அதிகரிக்கவும், அதன் வாயிலாக தமிழ்நாட் டின் ஒட்டு மொத்த பொருளாதா ரத்தையும் நமது இளைஞர்க ளுக்கான வேலை வாய்ப்பு களையும் உயர்த்துவதற்கு மான வழிவகைகளை த.வெ.க. அரசு உடனடியாகக் காண வேண்டுமெனவும் வலி யுறுத்துகின்றேன்.

இவ்வாறு முன்னாள் நிதி யமைச்சர் தங்கம் தென்னரசு கூறியுள்ளார்.

ஆந்திராவை நோக்கி நகரும்

'முரசு' தீவிரப் புயல்!

சென்னை, நவ. 3 -

மத்திய மேற்கு மற்றும் அதனை ஒட்டிய தென் மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் மையம் கொண்டிருந்த முரசு தீவிர புயல், கடந்த 6 மணி நேரத்தில் மணிக்கு 22 கிலோமீட்டர் வேகத்தில் மேற்குவட மேற்கு திசையில் நகர்ந்து வருகிறது. முன்னதாக மணிக்கு 25 கிலோமீட்டர் வேகத்தில் நகர்ந்து கொண்டிருந்த புயலின் நகரும் வேகம் தற்போது மணிக்கு 22 கிலோ மீட்டராகக் குறைந்துள்ளது.

தற்போது இந்த முரசு தீவிர புயல் முழுவதுமாக மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதியில் நிலை கொண்டுள்ளது. ஆந்திரக் கடலோரப் பகுதிகளை நோக்கி நகர்ந்து வரும் இந்தப் புயல், சென்னையிலிருந்து சுமார் 180 கிலோமீட்டர் வடகிழக்குத் திசையில் மையம் கொண்டுள்ளது.

மேலும், ஆந்திர மாநிலம் நெல்லூரிலிருந்து 160 கிலோமீட்டர் கிழக்கு தென்கிழக்கிலும், காவலியிலிருந்து 180 கிலோமீட்டர் தென்கிழக்கிலும், ஓங்கோலிலிருந்து 210 கிலோமீட்டர் தென்கிழக்கிலும் புயல் மையம் கொண்டுள்ளது.

இந்த முரசு தீவிர புயல் ஆந்திர மாநிலம் நெல்லூருக்கும் நரசாப்பூருக்கும் இடையே, ஓங்கோல் அருகே தீவிர புயலாகக் கரையைக் கடக்கக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. புயல் கரையைக் கடக்கும் சமயத்தில் மணிக்கு 120 கிலோ மீட்டர் வேகத்தில் பலத்த சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.